19/4/2000

விலை ரூபா 5/=

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 51 | பங்குனி - 2000 | பக்கங்கள் 12 | ஒளி 41

# பெண்களின் ஆற்றல், திறமைகளை வளர்ப்பதில் ஆண்களின் பங்களிப்பு மிக மிக அவசியமாகும்!

## மகளிர்தின விழாவில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம் பேச்சு

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெண்களின் உரிமைகள் மிகவும் சிறந்த முறையில் பேணப்பட்டு வருகின்றன. எமது நாடு போன்று அபிவிருத்தி அடையாத நாடுகளில் பெண்களின் உரிமைகள் மதிக்கப்படுவது குறைவு

யாழ்மாவட்ட கூட்டுறவுசபையின் யாழ் மாவட்ட மகளிர்குழு நடாத்திய அனைத்துலக பெண்கள் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி செல்வி. உமா சிவபாதசுந்தரம் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாவட்ட மகளிர் குழுத்தலைவி திருமதி. ரதிசோதிலிங்கம் தலைமையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது,

பெண்கள் ஆண்களுக்கோ அன்றி சமுதாயத்திற்கோ பயந்து வாழும் மனப்பான்மையை விடுத்து துணிவு மிக்க பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ முற்படவேண்டும், பெண்கள் பயம் இல்லாமல் வாழ்ந்தால் அவர்களுக்குப் எந்தவிதபயங்கரமும் வரமாட்டாது என்பதை அவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். பெண்களின் ஆற்றல்களையும் திறமைகளையும் ஊக்குவிக்க ஆண்கள் முன்வரும் பட்சத்தில் சமுதாயத்தில் அவர்கள் நிலை உயர்ந்து நிற்கும்.

குடும்பத்தில் தாயாக மனைவியாக இருப்பவர்கள் தங்கள் தங்கள் பொறுப்புக்களை சரிவரச் செய்யாது விட்டால் அக்குடும்பத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படும். குடும்பத்தில் தாயானவளின் செயற்பாடு சரியான விதத்தில் அமையாதுவிடின் அங்கு பல சிக்கல்கள் ஏற்படுகிறது. இதனால் பெண்கள் இன்றைய காலத்திற்கு ஏற்றவகையில் அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து நல்லவிடயங்களை செயற்படுத்த முன்வரவேண்டும்.

சமூதாய முன்னேற்ற விடயங்களிலும் பெண்கள் ஈடுபடுவதன் மூலமும் அதிக பயனைப் பெற்று சேவையாற்ற முடியும். போட்டி பொறாமை என்பன இல்லாது நேர்மையான முறையில் சேவையாற்றும் போது இவர்கள் பலராலும் மதிக்கப்பட்டு போற்றப்படுவார்கள் என்பது நிச்சயம் என்று கூறினார்.

முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ் மாவட்ட கூட்டுறவு (12ம் பக்கம் பார்க்க)

## உள்ளே....

★ இலங்கையில் கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும்
★ பெண்கள் தம் தியாகத்தினால் ஆண்களை சரணாகதி அடையச் செய்கிறார்கள்.
★ கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக கட்டமைப்பு
★ இருபதாம் நூற்றாண்டில் இலங்கை கூட்டுறவின் சாதனைகளும் ...... இருபத்தியோராம் நூற்றாண்டில் அதன் விரிவாக்கமும் செயற்பாடும்
★ காயத்தின் பராமரிப்பு
★ மணிமொழிக்கதை

# இலங்கையில் கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும்

பெ. கனகசபாபதி
தலைவர்
ப. நோ கூ. சங்கம் நல்லூர்.

மனிதகுலம் அறிவுமுதிர்ச்சி அடையாது விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத்திலும்கூட அதனிடம் கூட்டுறவு உணர்வும், கூட்டுறவுச் செயல்களும் காணப்பட்டன. கூட்டுறவின் தேவையை உணர்ந்தோ உணராமலோ ஆதிமனிதன் தனது வாழ்க்கை முறையில் கூட்டுறவைக் கடைப்பிடித்து வந்துள்ளான். இதன் நேர்க்கருத்து கூடி உழைத்தல் என்பதாகும். கூட்டு முயற்சி மூலம் கூடிய பலம் என்னும் பொருளும் கொள்ளப்படும். இன்று பொதுப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒன்று கூடி உழைக்கும் பொருட்டுக் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற நிறுவனங்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகின்றது.

மனிதவாழ்வில் தொழிற்றுறைகளைஅறிவியல், விஞ்ஞானம், தொழில் நுட்பம், அரசியல், பொருளாதார அமைப்பு போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி பெருமளவு மாற்றி அமைத்தன. கைத்தொழில் புரட்சியின் காரணமாகப் பேரளவு உற்பத்தி முறையிலும், பேரளவு அமைப்பு முறைகளும் தோன்றி வாழ்க்கை முறையிலும் தொழில் முறையிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இம் மாற்றங்களின் விளைவாக தொழிலாளர், விவசாயிகள் வாழ்கையில் சகிக்க முடியாத பெருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கினர். இக்கால கட்டத்தில் ஆலை அதிபர்களும், உரிமையாளர்களும் செல்வச் செழிப்புமிக்க உயர்ந்த ஆடம்பர வாழ்க்கை வாழ தொழிலாளர்களோ பஞ்சம் பிணி, பட்டினியுடன் வறுமை வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

சமுதாய அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் பல அறிஞர்களைச் சிந்திக்கத்தூண்டின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் புரட்சிச் சிந்தனையாளரான கார்ல்மாக்ஸ் முதலாளித்துவ அமைப்பையே குழிதோண்டிப் புதைக்க வேண்டுமென்றார். சமதர்ம அமைப்பு ஒன்றை ஏற்படுத்த பொது உடமை இலட்சியத்தை நோக்கிச் செல்லும் கருத்துக்களையும், செயற்பாட்டு முறைகளையும் வெளியிட்டார். முதலாளித்துவ அமைப்பிலுள்ள சமூக பொருளாதாரக்கேடுகள் ஒரு புறம், அக்கேடுகளை அகற்றுவதற்காகத் தோன்றிய புரட்சிகரமான பொதுவுடமைத் தத்துவத்திலுள்ள தனிமனிதச் சுதந்திரத்தன்மைக் குறைபாடுகள் மறுபுறம். இவ்விரு புறத்திலுமுள்ள நல்ல அம்சங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட உயர் இலட்சிய நோக்கே கூட்டுறவாகும். முதலாளித்துவ நோக்கிலிருந்தும், பொது உடமை நோக்கிலிருந்தும், மாறுபட்ட நோக்கையுடையதும், சுயநலமற்ற ஒத்துழைப்பு மனப்பான்மையும், பிறருக்குதவும் மனப்பான்மையும், அறவழிசார்ந்த உயர் பண்புகளும் நிறைந்த வாழ்க்கை முறையை இலட்சியமாகக் கொண்டதே கூட்டுறவாகும்.

இலங்கையின் கூட்டுறவு வளர்ச்சிக் காலத்தை நோக்கும்போது முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து கிராமிய மக்களிடையே தோன்றிய கடன் பிரச்சனையைத் தீர்ப்பதை மையமாகக் கொண்டு 1911ஆம் ஆண்டில் 7ம் இலக்க கூட்டுறவுக் கடனுதவு சங்கங்களின் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் கருத்துக்களின் பிரகாரம் ஐக்கிய நாணய சங்கங்களை உருவாக்கக்கூடியதாக இருந்தது இரண்டாம் உலக யுத்த காலம்வரை ஐக்கிய நாணய சங்கங்களே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தன. காரணம் கிராமிய கடன் பிரச்சனை முக்கிய பிரச்சனையாக நிலவியதே ஆகும். எனவே, மக்களின் கடன் தொல்லைகளை நீக்கிக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் கடன் பழுவிலிருந்து விடுவிக்கும் பொருட்டுச் சேமிக்கத் தூண்டுவதும் பொருளாதார நிலையை உயர்த்துவதும் பரஸ்பர உறவுகளை வளர்பதுமே இச்சங்கங்களின் நோக்கமாக இருந்தன.

1912ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் கூட்டுறவு நாணய சங்கமாக காலி மாவட்டத்தில் ''வெல்லபொடபத்து'' என்னும் இடத்தில் முதலாவது கூட்டுறவு கடனுதவிச் சங்கம் பதியப்பட்டது. 1913ஆம் ஆண்டில் கமத்தொழிலாக ஆரம்பிக்கப்பட்டு விவசாய அதிபருக்கு அவரது வழமையான கடமைகளோடு கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. இச் சங்கங்களுக்கு கடனுதவி செய்வதற்காக 1915ஆம் ஆண்டு உள்ளூர் கடன்கள அபிவிருத்தி நிதியேற்படுத்தப்பட்ட போதும் போதியளவான நிதி கொடுபடவில்லை; இருந்தும் 1911ஆம் ஆண்டிலிருந்து 1920ஆம் ஆண்டு வரை இலங்கையில் கடனுதவு சங்கங்களே அதிகமாக உருவாக்கப்பட்டிருந்தது.

அபிவிருத்தியடைந்து கொண்டு சென்ற கூட்டுறவு இயக்க விடயங்களைக் கட்டுப்படுத்த 1911ஆம் ஆண்டு உருவாக்கிய சட்டத்தினால் முடியாது போகவே 1921இல் இக்கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டது. 1921இல் 34ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தில் 43வது சரத்திற்கேற்ப 1911இல் கட்டளைச் சட்டம் செல்லுபடியாகாமல் செய்யப்பட்டது. இதன் மூலம் கூட்டுறவு கடனுதவு சங்கங்கள் தவிர்ந்த ஏனைய நுகர்வு விவசாய சந்தைப் படுத்தும் சங்கங்களும் பதிவு செய்ய வழி வகுக்கப்பட்டது. இத் திருத்தத்தின் பிரகாரம் 1924இல் முதல் மேற் சங்கமாக கொழும்பு மாவட்ட கூட்டுறவுச் சமாசம் பதிவு செய்யப்பட்டது, அத்துடன் கூட்டுறவு நாணய சங்கங்கள் அல்லாத ஏனைய சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக 1928ஆம் ஆண்டு பொமிரியா கூட்டுறவுப் பாற்பண்ணைச் சங்கமும் உருவாக்கப்பட்டது, நாணய சங்கங்களுக்கு உதவும் வகையில் 1929ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் முதலாவது கூட்டுறவு மாகாண வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

1930ஆம் ஆண்டு இலங்கையில் கூட்டுறவு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகக் கூட்டுறவுத் திணைக்களம கூட்டுறவு இலாகாவாக மாற்றம் பெற்றது. யாழ்ப்பாண ஐக்கிய நாணய சங்கங்களை ஒருங்கிணைதது நடாத்த இவைகளுள் ஒரு அமைப்பு தேவை என கூட்டுறவாளர் ஆலோசித்து 1937ஆம் ஆண்டு வடபகுதி ஐக்கிய மேற்பார் சபையில் உருவாக்கினர். (தற்போது யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை) இக்காலப் பகுதியில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைந்த போதும் 1921ம் ஆண்டு

(4ம் பக்கம் பார்க்க)

# பெண்கள் தம் தியாகத்தினால் ஆண்களை சரணாகதி அடையச் செய்கிறார்கள்!

**யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் மாவட்ட மகளிர் குழு நடத்திய அனைத்துலக பெண்கள் தினத்தில் சிறப்புரையாற்றிய யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி நாச்சினார் செல்நாயகம் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவின் முக்கிய அம்சங்கள் இங்கே தரப்படுகிறது.**

மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்றார் கவிஞன் பெருமகன்

இந்த மகளிர் என்பவர் யாவர், இவற்றுக்குரியகடமைஎன்ன இவர்கள் என்னநிலையில் வைக்கப்பட்டுள்ளனர் எனச் சிந்திக்கவுள்ளோம்.

இன்று மகளிர் தின நாள். தீமைக்கு எதிராக குரல் கொடுத்த நாள் இதுமட்டுமல்ல நம்முடைய கடமை என்ன என்பதை தெரிந்து செயற்படுவதற்குரிய விழிப்புணர்வு நாளாக இது அமைய வேண்டும்

தாய் என்ற புனித தெய்வம் குடும்பத்தையோ, சமூகத்தையோ, நாட்டையோ காக்கின்ற ஒருபடைப்பு எனவே தாயை விட்டு எதனையும் பார்க்க முடியாது

பண்புடையவர்களைஉருவாக்குவது தாய்மையின் கடமை பெண்ணென்றால்யார்? நம்மை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உன்னை நீ அறி என்று சொல்லுவார்கள்.

நானார், என்னுள்ளம்யார், என்றார் மணிவாசகர்.

பெண்கள் வெறும் உரிமைக்கு குரல் கொடுக்காமல் எமது கடமைகளை திறம்பட செய்யவேண்டும்.

இந்தஉலகில் அன்பினால் செய்ய முடியாதது எதுவுமில்லை அன்பிற்கு வசப்படாதோர் எவருமில்லை, ஒன்றுமில்லை. எனவே தாய்மைக்குரிய அன்புவளத்திலேயே எங்களைப் பயன்படுத்த வேண்டும்

பெண்களிற்கு என்றே சிறப்பான குணம் தியாகமாகும் குடும்ப விளக்கு

> பெண்ணானவள் பண்பாடு காத்து பேணிவருவாளானால், அந்தப்பண்பாடு நிலைத்தால் அவள் தாழ்த்தப்படுவதற்குரியவள் அல்ல, போகத்துக்குரியவள் அல்ல, சமயலறைக்குரியவள் அல்ல, அவள் அடிமையல்ல. அவள் புனிதமான கோயில் வழிபாட்டுக்குரிய தெய்வம்.

வாழ்க்கை என்ற தத்துவத்தில் தாயைப் போல ஒரு புனிதத்தினை நாம் காணவே முடியாது. இப்படி தாய் தன்னை வளர்த்துப் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை அறிந்து கொள்ளக் கூடிய நிலையை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எங்களுக்குரிய அறத்தை அன்பை எப்படியும் நாம் வளர்க்க வேண்டும்

தாய் என்பவள் கருணையிலே தியாகத்திலே, அன்பினாலே, பண்பினாலே, பாசத்தினாலே பற்றி பேணி பாதுகாத்து குடும்பத்தை புனிதமாக கட்டிக்காக்கும் ஒரு ஆற்றல் உள்ளவர். இவ்வாறு பேணாவிட்டால் நம்முடைய வாழ்வு வளம்பட முடியுமா?

அன்னையானவள் பாலுடன் அன்பையும் சேர்த்தே ஊட்டுகின்றாள். இந்த அன்பூட்டல் தான் நாட்டிற்கு சிறந்த அறிஞரை, பண்பாட்டாளரை உருவாக்கும்.

என்றே பெண்களைச் சொல்கிறார்கள் குடும்ப விளக்கு தன்னை, தியாகம் என்ற எண்ணையினால் பிரகாசிக்கிறீர்கள் தியாகம் இல்லாமல் வாழ்க்கை இல்லை.எமக்கு சமஉரிமை வேண்டும் என நாம் கேட்கக்கூடாது நாம் செய்யும் தியாகத்தின் மூலம் அவர்கள் எம் தியாகத்தின் முன்னால் அவர்கள் பூரண சரணாகதி அடைய வேண்டும்.

ஆண்களை சரணாகதியாக்குவது பெண்களுடைய தியாகம். பெண்களின் அன்பு, தயை, இரக்கம் தான் முக்கியமானது. நல்ல ஒரு மனைவி அமைவது இறைவன் கொடுத்தவரம். நல்ல ஒரு பெண் ஒரு சிற்பியைப் போன்றவள் உலகத்தைரட்சிப்பவள்.

பெண்களுக்குஎவ்வளவோ கொடுமைகள், சீதனக் கொடுமைகள் பயங்கரமான கொடுமை உண்மையிலேயே வெட்கப்பட வேண்டியது. இந்த சீதனத்தைக்கேட்பவர் ஒரு ஆணினுடைய தாய். எனவே நாங்களே எங்களை விமர்சிக்க புகுந்தால் குடும்பம் முன்னேறும் குடும்பத்திலே இன்பம் தழைக்கும்.

சீதனம் எதற்காக? எங்கள் வாழ்வை வளம்படுத்த பொருளாதாரம் தேவைதான் அதற்காக கொடுமைப்படுத்தி, பச்சைமாங்காயை அடித்துக் குத்திப் பழுக்க வைக்க முடியும்?

அன்பில்லாத வாழ்க்கை வாழ முடியுமா? அன்பில்லாத வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளித்தற்று என்றான் வள்ளுவர்.

எனவே அன்பில்லாது வெறும் சீதனத்தோடு போகலாமா பட்டங்கள் சட்டங்கள் எல்லாமே வாழ்க்கையை வளம்படுத்த முடியுமா? அன்போடு இணையும் பொழுதுதான் அவை வாழ்வை வளம்படுத்த முடியும் எனவே, நாம் பெண்குலம் இது தாய்மைக்குலம் - இது பண்பாட்டிலே அன்பு வளத்திலே எங்களைப் பண்படுத்தி கொண்டாலன்றி நாம் பெண்களென்று சொல்லவே முடியாது.

பெண்கள் தங்களுடைய தியாக குணத்தால் குடும்பத்தை ஒளிபெறச் செய்கிறாள். பெண்களைகுடும்பவிளக்கென்று இதனாலே தான் சொல்வர். இந்தக் குடும்பவிளக்கு தன்னை இந்த தியாகம் என்ற நெய்யினாலே எண்ணையினாலே பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கின்ற தன்மையில் நாங்கள் உணர, அறிய வேண்டும். அதை அறிந்து நம்முடைய வாழ்வை நாம் வளம்படுத்தவேண்டும்.

உலகத்திலே பெரிய சாதனைகள் செய்வோம் எல்லாரும் தியாகிகள் தான் தியாகம் இல்லாது வாழ்க்கை தொனிக்க முடியாது

10பக்கம் பார்க்க

# இலங்கையில் கூட்டுறவின் தோற்றமும்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தம் செய்யப்பட்ட கட்டளைச் சட்டம் பூரணத்துவம் உடையதாக விளங்கவில்லை. காரணம்,

01. மத்தியஸ்த விசாரணைக்கான வசதியின்மை

02. சங்கக் குலைப்பு விடையங்களைப் பொறுத்துத் தடைகள் ஏற்பட்டமை:

இந்நிலையில் 1934ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலக் கூட்டுறவுப் பதிவாளராகவிருந்த திரு. எச். கல்வேட் என்பவர் இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக வரவழைக்கப்பட்டார். இவர் பல சட்ட நிர்வாகத் திருத்தங்களை ஏற்படுத்தினார். திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 1936ஆம் ஆண்டு 16வது இலக்கக் கட்டளைச் சட்டம் இதன் முழுமையான பயனை அடையமுன் 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமானது. கூட்டுறவு இயக்கத்தின் இரண்டாம் கட்டம் இரண்டாம் உலக யுத்தத்தின் ஆரம்பத்துடன் தொடங்குகின்றது. யுத்த காலத்தில்,

01. உணவுப் பொருட்களைப் பெறுவது கஷ்டம்

02. உணவுக்குத் தட்டுப்பாடு, கட்டுப்பாடும் ஏற்பட்டமை.

03. கொள்ளை இலாபம் அடிப்பது போல் கள்ளச்சந்தை போன்ற நடவடிக்கைதோற்றமெடுத்தமை

இதன் காரணமாக இவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்ற அவர்களுக்கு தேவையான நுகர் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றை அரசாங்கம் வழங்க வேண்டிய நிலை உருவாகியது இதனால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகின. 1942ல் இருந்து 1945வரை கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் துரித வளர்ச்சி அடைந்தது. 1945ஆம் ஆண்டு நுகர்வோர் சங்கங்கள் 38 ஆகவும், 1945ஆம் ஆண்டு 4004 ஆகவும் பன்மடங்காக அதிகரித்துக் காணப்பட்டது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருட்களைப் பெற்று வழங்குவதற்கு 1943ஆம் ஆண்டில் கூட்டுறவு இலாகா கூட்டுறவு மொத்தவிற்பனை நிலையத்தை ஆரம்பித்து உணவுப் பொருள் விநியோகம் செய்வதில் ஆர்வம் காட்டியது.

யுத்த காலத்தில்ஏற்பட்ட உணவுத்தட்டுப்பாடு விவசாயஉற்பத்தியில் அரசின் கவனத்தைஈர்த்தது இக்காலகட்டத்தில். நம் நாட்டில் கிராமிய விவசாயத்துறையில்கடன்வசதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியாமை, விளைபொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்யமுடியாமை போன்ற இரு பிரச்சனைகள் காணப்பட்டன. அதனால் அரசாங்கம் நிதிஉதவிகளை வழங்கவும், உற்பத்திப் பொருட்களை உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்து சந்தை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் 1947இல் விவசய உற்பத்தி விற்பனைச் சங்கங்களை ஸ்தாபிக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

இச்சங்கங்களுடன் கூட்டுறவுப் பாற்பண்ணையாளர்கள், மீன்பிடிச் சங்கங்கள், தெங்கு உற்பத்தி விற்பனையாளர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் ஆகிய பல சங்கங்களும் நாட்டின் பல பாகங்களிலும் பதிவு செய்யப்பட்டன. 1948ஆம் ஆண்டில் அரசியல் சுதந்திரத்திற்குப் பின் தேசிய அபிவிருத்தியில் காட்டப்பட்ட வலியுறுத்தல் கூட்டுறவுத் திணைக்களத்தை ஒரு பிரதான அரசாங்கத் திணைக்களமாக மாற்றியமைத்தது.

விவசாயத்திற்கு நிதியுதவி வழங்குவதற்காக 1949ஆம் ஆண்டு கூட்டுறவு சமஷ்டி வங்கி நிறுவப்பட்டது.

பொருளாதார அபிவிருத்திக்கு கூட்டுறவ இயக்கத்தின் சேவை மேலும் அவசியம் என்ற கருத்தினை 1956ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்து மக்கள் ஐக்கிய முன்னனி அரசாங்கத்தின் உணவு விவசாய மந்திரியான பிலிப் குணவர்த்தனா அவர்கள் முன்வைத்த கடன் வசதிகள், சந்தைப் படுத்தல் வசதிகள், நுகர்வோருக்குப் பொருட்களை வழங்குதல் மற்றும் ஏனைய சேவைகளை அளித்தலாகிய பல நோக்கங்களை ஒன்று கூட்டிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்தப் புனர் அமைப்பின் கீழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்கல், சேமிப்புக்களைத் திரட்டல் போன்ற பணிகளிலும் கிராமிய அபிவிருத்தியை மேற்கொள்ள ஓர் அபிவிருத்திக் கூறாகவும் செயற்பட வேண்டிய அவசியம் எழுந்தது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பரந்து பட்ட பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாகையினால் நோக்கங்களை அடைவதற்காக பலம் வாய்ந்த நிதிஇயக்கம் ஒன்று அவசியம் எனக் கருதப்பட்டது.

அப்போது அமைந்திருந்த கூட்டுறவு வங்கி முறை தேவைகளைப் பூர்த்திசெய்யப்போதாததாகக்கருதப்பட்டது. எனவே கூட்டுறவு இயக்கத்திற்கெனச் சேவையாற்ற விசேட தத்துவம் பெற்ற அதேவேளையில் இயக்கத்திற்கு நிதி வழங்கவும் அத்தகைய கடன் வசதிகளை அளிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தாங்கிக்கொள்வதற்கும் பலம் வாய்ந்த ஒரு நிறுவனம் அவசியமாக இருந்ததால் கூட்டுறவு வங்கிகள் மக்கள் வங்கியாக மாற்றம் செய்யப்பட்டன. மக்கள் வங்கியானது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கிராமியத் துறையினருக்கு பாரிய சேவைகளை ஆற்றுவதற்கென 1964ஆம் ஆண்டில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிராமிய வங்கிகளை அமைத்தது:

அரசாங்கத்தின்மேலாதிக்கத்தின் கீழ் இயங்கிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்கின இப் பிரச்சனைகளை முன்னிட்டு 1967இல் லெயிட்லோ என்பவரின் தலைமையின் கீழ் அரசு ஒரு ஆணைக் குழுவினை நியமித்தது. இவ் ஆணைக்குழு 1970ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட அறிக்கையில்காணப்பட்ட எதிர்கால மாற்றங்கள் "சிறிய மந்த கதியிலான இயக்கக் கோட்பாட்டினை நாம் நிச்சயமாக இங்கே ஆதரிக்கவில்லை. கூட்டுறவுச் சங்கம் உறுப்பினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளையில் தேசிய அபிவிருத்திக்காக பாரிய பங்களிப்பைச் செய்தல் என்ற இரண்டு முக்கிய தொழிற்பாடுகளை நிறைவேற்றலாம் புதிய நோக்கத்தினால் பயனுடைய விளைவுகளைப்பெற தற்போதைய அமைப்பு முறையில் சிறு சிறு மாற்றங்களை மேற்கொள்வதை விட கூடுதலான மாற்றம் இந் நாட்டின் கூட்டுறவு இயக்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். கூட்டுறவு அமைப்பில் எந்தவொரு விடயமும் தொடர்ந்து நிலைபெறக் கூடாது என்றும், புதியகொளு கோற்

(11ம் பக்கம் பார்க்க)

# பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாக கட்டமைப்பு

பலநோக்கு கூட்டுறவு சங்க முகாமை மிகவும் சோதனை மிகுந்த இக்கால கட்டத்தில் தமது திறமை முழுவதையும் வெளிப்படுத்துவதுடன் தியாக மனப் பான்மையுடன் சேவை யாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் கடந்தகாலங்களில் வளங்கப்பட்ட தனி உரிமை மறுக்கப்பட்டு தனியாருடன் போட்டியிட்டு வளரவேண்டியுள்ளது. தனியாருடன் போட்டிஇடக்கூடியளவிற்கு மூலதனம், நிர்வாகம், அமைவிடத் தெரிவு, சாதகமாக அமையவில்லை மேலும் வேலை நேரக்குறைவு, சம்பளம் குறைவு, பணியாளர் பாதுகாப்பு இன்மை போன்றகாரணங்களால் ஊழியர்கள் தமது முழுவினைத்திறனையும் வெளியிட முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. ஆகவே முகாமை பணியாளர்களுக்கு வேதனம் பாதுகாப்பு, தொழில் உறுதி போன்றநடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குறைந்த விலையில் தரமான பொருட்களை. மக்களுக்கு வேண்டிய அளவில் வேண்டிய காலத்தில் தொடர்ச்சியான சேவையை வழங்க வேண்டி இருக்கிறது எனவே மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் சமூகப் பொறுப்பும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது எனலாம்.

பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத்திறனை அதிகரிப்பதற்காக கூட்டுறவுத்திணைக்களம் ஆலோசனை மேற்பார்வை, கட்டுப்பாட்டு முறைகளைக் கவனித்துவருகின்றது. இதற்கு மாவட்டக்கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர்பொறுப்பாகஇருந்துவருகின்றார் இவரின் கீழ் கூட்டுறவு பரிசோதகர் சங்க ரீதியாக பகிர்ந்தளிக்கப்பட்டு சட்ட உபவிதிக்கு இணங்க முகாமையின் தீர்மானம் அமைகின்றதா? இதனை முகாமையாளர் எவ்வாறு நடைமுறைப் படுத்துகின்றார் என மேற்பார்வை செய்யப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அபிவிருத்திக்குப் பொறுப்பாக அமைந்த பகுதியுடன் தொடர்பு இல்லாமல் கணக்காய்விற்கும் தனியான கூட்டுறவு உதவி ஆணையாளர் பொறுப்பாக இருந்து ஒவ்வொரு பல நோக்கு கூட்டுறவு சங்கமும் வருடாவருடம் கணக்காய்வு செய்யப்படுகின்றது. இதனால்மோசடி பிழைகள் தவிர்க்கப்படுவதுடன் முகாமையின் நடவடிக்கையும். சங்கப் பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப் படுகிறது.


வே. மணிமாறன்

விரிவுரையாளர் (முகாமைத்துவம்)


யாழ். பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி


ஸ்ரீலங்கா. தேசியக் கூட்டுறவுச் சபையும், சங்கவளர்ச்சிக்கு வேண்டிய முகாமைத்துவ நடவடிக்களை மேற்கொள்கின்றது. இங்கு மாவட்டச் செயலாளர், கல்வி உத்தியோகத்தர்கள். கூட்டுறவு திணைக்களத்துடன் இணைந்தும் தனியாகவும் பணியாளருக்கும் முகாமைக்கும் கிளைக் குழுஉறுப்பினர்களுக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு கருத்தரங்குகள் பயிற்சி வகுப்டக்கள் ஆகியவை நடத்தப்படுகின்றன அத்துடன் முகாமைக்கும் ஆலோசனை வழங்குவர். இதனால் சங்கநிர்வாகம் திறமையாகச்செயற்படக் கூடியதாக இருக்கின்றது ஆகவே ப நோ. கூ சங்க நிர்வாக அமைப்பில் அகத்தாக்கங்கள் மட்டுமன்றி புறத்தாக்கங்களையும் அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்க நிர்வாகத்தின் அசமந்த போக்கு காரணமாக சில பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்நட்டத்தில் இயங்குகின்றது அதாவது இவர்களுடைய முகாமைக் கட்டுப்பாடு சரிவர இயங்காமையே இதற்குக் காரணம் எனலாம்: இதனால் கிளைகளில் பாரிய சோர்வு ஏற்படுகின்றது இவற்றை தடுப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதில்லை. இவற்றை தடுப்பதற்கு தண்டம், வட்டி அத்துடன் பாரிய சோர்வு ஏற்படும் கிளையின் முகாமையாளரை தற்காலிகமாக இடைநிறுத்தல் போன்றவற்றின் மூலம் இவற்றை கட்டுப்படுத்தலாம் பொதுவாகஊழியரின் வேண்டா வெறுப்பு போக்கிடம் செயற்படுதல் அதாவது எங்களுக்கு சம்பளம் வரும் தானே என்று செயற்படுதல் மேற் போன்றவற்றை உரிய முறையில் களைந்து மக்களுக்கும்நாட்டிற்கும் சேவையாற்ற வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

''வாழ்க கூட்டுறவாளர்கள் வளர்க பல நோக்குக் கூட்டுறவுக் சங்கங்கள்''

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக கட்டமைப்பு



# இருபதாம் நூற்றாண்டில் இலங்கைகூட்டுறவு இயக்கத்தின்சாதனைகளும்

# இருபத்தியோராம் நூற்றாண்டில் அதன் விரிவாக்கமும் செயற்பாடுகளும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இன்று நாட்டு மக்கள் அனைவரும்கூட்டுறவு அமைப்புக்களில்முழுமையாக இணைந்து கொள்ளவில்லை. கூட்டுறவு அமைப்புக்களில் உறுப்புரிமை பெறத் தகுதியுடையவர்களில் இருபது வீதத்திற்குக் குறைவானவர்களே கூட்டுறவு அமைப்புக்களில் உறுப்பினர்களாக இணைத்துள்ளனர். ஏனையோர் இன்று வரை கூட்டுறவு அமைப்புக்களில் இணைய முன் வரவில்லை. இவர்களைக் கூட்டுறவு அமைப்பில் இணைப்பதற்கான வலுவான ஆக்கபூர்வமான பிரசார நடவடிக்கைகளை கூட்டுறவு அமைப்புக்கள் மேற்கொள்ளவுமில்லை. ஒரு சில மக்கள் தாமாக விரும்பித் தமது,தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறு சிறு கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்க முன் வரும் பொழுது அவற்றை ,மழுங்கடிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படடு வருவது மிக மன வருத்தத்திற்குரியதாகும்.

இன்று கூட்டுறவு அமைப்புக்களில் இணைந்துள்ள அங்கத்தவர்கள் கூட கூட்டுறவு அமைப்புக்களைப் பற்றிய அறிவற்றவர்களாகவும், அவற்றின் மீது விசுவாசமற்றவர்களாகவும், அவற்றின் நிர்வாகத்தில் அக்கறையற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர். அகதி உணவைப் பெறுவதற்காகவும் புனர்வாழ்வுச் சேவைகளைப் பெறுவதற்காக மட்டுமே இவர்கள் கூட்டுறவு அமைப்புக்களை நாடி வருகின்றனர். அதன் பின் அவர்கள் அமைப்பைப் பற்றிச் சிந்திப்பதேயில்லை.

ஒருசில குறிப்பிடத்தக்க உறுப்பினர்கள் மட்டுமே கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகளிலும், நிர்வாகத்திலும், தலைமைத்துவத்திலும் நீண்ட காலமாக ஈடுபடும் விசுவாசமும் உள்ளவர்களாகச் செயற்பட்டு வருகின்றனர் இலங்கைக் கூடடுறவு அமைப்பு மூழுமையான மக்கள் மயப்படுத்தப்பட்ட அமைப்பாக இன்று வரை உருவாக்கப்படவில்லை. நாட்டு மக்கள் அனைவருக்கும் கூட்டுறவு அமைப்புக்களின் நலன்கள் பகிர்ந்தளிக்கப்படாதது மிக மனவருத்தத்திற்குரியதாகும்.

இந்நிலையில் இலங்கைக் கூட்டுறவு அமைப்புக்களை எவ்வாறு ''மக்கள் அமைப்புக்கள்'' எனக்கூற முடியும். அரசியல் தலையீடுகளும் சட்டக்கட்டுப்பாடுகள்'மக்கள் அமைப்பு' என்ற பண்பிற்கு ஊறு விளைப்பதாக இன்றைய நிலையில் கருதமுடியாது. நாம் அவற்றை முன்னர் இக்கட்டுரையில் அமைப்பின் பாதுகாப்புக் கவசங்களாகவே விபரித்துள்ளோம். ஆனால் மூழுமையான மக்களின் ஈடுபாடும் மக்களின் விசுவாசமும் இல்லாமல் ஒரு மக்கள் அமைப்பு செயற்பட முடியாது. மக்களின் முழுமையான ஈடுபாடும விசுவாசமும் அற்ற அமைப்பு ''ஒரு போலி அமைப்பு'' ஆகும்.


இ. சுப்பிரமணியம்

முன்னாள் அதிபர் யாழ் பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி.


இதனைப் பூரணமாக நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் இருபத்தியோராம் நூற்றாண்டுக் கூட்டுறவாளர்களை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சனையாகும். எதிர்வரும் இருபத்தியோராம் நூற்றாண்டில் கூட்டுறவு அமைப்புக்களின் உறுப்பினர்கள் அனைவரையும், அமைப்புக்களில் விசுவாசமும், ஈடுபாடுமுள்ளவராக்குவதற்கும், தகுதியுள்ள நாட்டு மக்கள் அனைவரையும் கூட்டுறவு அமைப்புக்களில் உறுப்பினராக இணைத்துக் கொள்வதற்கும் துரித நடவடிக்கைகள்'மேற்கொள்ளப்பட வேண்டும். துண்டுப்பிரசுரங்கள் சஞ்சிகைகள், பத்திரிகைகள் வானொலித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நாடகங்கள் படக்காட்சிகள் பயிற்சி வகுப்புக்கள் கருத்தரங்குகள் போன்றவற்றின் மூலம் கூட்டுறவு அமைப்புக்களைப் பிரசாரம் செய்யவும் விரிவாக்கவும் கூட்டுறவு அமைப்புக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவு அமைப்புக்கள் தமது இலாபத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை கல்வி பிரசாரப் பணிகளுக்கென ஒதுக்கி அந்நிதியிலிருந்து இப் பணிகள் புரியப்பட வேண்டும். அரசாங்கமும் அரசாங்க நிறுவனங்களும் இப்பணியைச் சிறப்பாகப் புரியப் பூரண ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். கூட்டுறவு அமைப்புக்களின் இரண்டாம்படி மாவட்ட, தேசிய, சர்வதேச ரீதியான அமைப்புக்களும் இப்பிரசா விரிவாக்கப் பணிகளுக்கு முழுமையான ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

கூட்டுறவு அமைப்புக்கள் அரசாங்கத்திடமும் அரசாங்கவங்கிகளிடமும் நிதி உதவிக்கும், கடன்களுக்கும் பெறுவதினால் தான் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கும் தலையீட்டுக்கும் ஆளாகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் தமது சொந்த முதலை அதிகரித்துக் கொள்வதன் மூலமும், கூட்டுறவு வங்கி கிராமிய வங்கிச் சமாசம் போன்ற கூட்டுறவு நிதி நிறுவனங்களை உருவாக்கி அவற்றை முழுமையாக ஆதரிப்பதன் மூலமும் அரசாங்கத்தினதும் அரசவங்கிகளினதும் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை முழுமையாக நீக்கிக் கொள்ளலாம்.

கூடடுறவுச் சங்கங்கள் தமது சொந்த முதலை அதிகரிக்க பின்வரும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். தகுதியுள்ள மக்கள் அனைவரையும் கூட்டுறவு அமைப்புக்களில் அங்கத்தவராக்குவதன் மூலமும். அங்கத்நவர் பங்குப்பணத்தைக் கணிசமான அளவு அதிகரிப்பதன் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பங்கு முதலை அதிகரித்துக்கொள்ளலாம். சேமிட்பின் அவசியம் பற்றிய பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் அங்கத்தவர்களின் சேமிப்புக்கான வட்டிவீதத்தை ஏனைய நிதிநிறுவனங்களிலும்பார்க்க கூட வளங்குவதன் மூலமும், நாணயமும் நம்பிக்கையும் மிக்க கிராம வங்கிச் சேவை மூலமும் அங்கத்தவரின் சேமிப்பை அதிகரித்துக்கொளளலாம். கூட்டுறவு அமைப்புக்களின் உறுப்பினர்களும் சங்கம் தமது நிறுவனமென்ற பற்றுடன் தமது சேமிப்பை அரச தனியார் வங்கிகளில் முதலிடாமல் கூட்டுறவுக் கிராம வங்கிகளில் முதலீடுவதன் மூலமும் சங்கத்திற்கு நன்கொடைகளையும் உதவு தொகைகளையும் வழங்குவதன் மூலமும் சங்கத்தின் சொந்த மூதல் அதிகரித்துக் கடன் முதலைக் குறைத்துக் கொள்ளலாம். கூட்டுறவு அமைப்புக்கள் தமதுதொழிற் பா,களைப்பன் மடங்காக அதிகரித்து இலாபத்தை ஈட்டுவதன் மூலமுப தமது சொந்தமுதலை அதிகரிதுக் கொளளலாம். இதற்கு ஏற்ற வகையில் கூட்டுறவு அமைப்புக்கள நவீன சமூக பொருளாதார வர்த்தக தொழிலமைப்புக்களாகப் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

(8ம்பக்கம் பார்க்க)

# காயத்தின் பராமரிப்பு

ஒரு தொடர்ச்சியான இழையத்தில் வெடிப்பு அல்லது பிளவு ஏற்படுதல் காயம் எனப்படும். இழையத்தில் ஏற்பட்ட சேதம், காயம் ஏற்பட்ட காரணம், தொற்றையுண்டாக்கக் கூடிய கிருமி என்பவற்றை பொறுத்து காயங்களை வகைப்படுத்தலாம்.

1. திறந்த காயம்

இது ஒரு தொடர்ச்சியான சருமத்திலோ, சிதச்சவ்விலோ வெட்டு அல்லது தொடர்பு அற்ற நிலையாகும். திறந்த காயத்திலிருந்து உடல் பாயங்கள் இழக்க நேரிடும். காயத்தினூடாக பிற பொருட்களும், கிருமிகளும் உட்செல்ல முடியும்.

2. மூடிய காயம்

இக் காயம் நேரடித் தாக்குதலாலும் கூர்மையற்ற ஆயுதங்களால் அல்லது நெரிபடுவதனால் உண்டாகும். ஒன்றாகும். குருதிக் குழாய்களில் தாக்கம் ஏற்படுவதனால் இழையங்களுக்குள் குருதி ஒழுக்கு ஏற்படுதலும், உடலிலுள்ள பாய்பொருள் திரவங்களும் கசிவதனால் நிறமாற்றம் தென்படும். குருதிப்பெருக்கு குறிப்பிட்ட இடத்தில் ஏற்பட்டிருப்பின் குருதிக் கட்டி காணப்படும் ( ஹீமற்றோமா )

5. உராய்வுக் காயம்

இது சருமத்தின் மேற்பரப்பை உராய்வினால், மேலணிக் கலங்கள் பாதிக்கப்பட்ட நிலை.

6. துளைவுக் காயம்

இது ஒரு ஆயுதத்தினால் உடல் பரப்பின் சுவரை அல்லது உடல் உறுப்பை வெடிக்கச் செய்தல்.

7. குத்துக் காயம்

ஒரு கூரிய ஆயுதத்தினால், ஆழமான இழையங்களை சேதப்படுத்தல். சருமத்தில் சிறு துவாரமான காயம் மட்டும் தென்படும், இக் காயம் ஆபத்தானது. ஏனெனில் பிராணவாயு அற்ற சூழ்நிலையில் நன்றாக பெருக்கக் கூடிய கிருமிகளான குளோஸ்ரிடியம் றெற்றனை, குளோஸ்ரிடியம் வெல்ஷி போன்ற கிருமிகள் காயப்படுத்தும் போது உட்புகுந்து இழைய சேதங்களை உண்டாக்கும்.

காயம் குணமடைதல் பின்வரும் மூன்று முறைகளில் நடைபெறலாம்.

1 முதலாம் தர உண்ணோக்கம் ( ஆரம்ப ஒன்று சேரல் )

2 இரண்டாம் தர உண்ணோக்கம் ( தாமதமான ஒன்று சேரல் )

# சுகவளம்

வீக்கமும், நோவும் அப்பகுதியை வழங்க முடியாமையும் திறந்த, மூடிய காயங்களில் பொதுவாக காணப்படும் அறிகுறியாகும்.

3. சத்திர சிகிச்சை காயம்

ஒரு வைத்தியரினால் கிருமிகள் அற்ற சூழ்நிலையில் குறிப்பிட்ட ஒரு பாகத்தில் உண்டாக்கும் இக்காயம், கூரிய தொற்றுநீக்கம் செய்யப்பட்ட ஆயுதத்தால் வெட்டப்பட்டதும், சருமத்தின் ஓரங்கள் ஒழுங்கான முறையில் ஒன்று சேர்க்கக்கூடியதுமாகும் இக் காயத்தினால் அதிகளவு குருதிப் பெருக்குண்டாகும்.

4. கிழிவுக் காயம்

சருமத்தின் ஓரங்களை ஒழுங்கு சேர்க்க முடியாதிருத்தல். காயம் சுகப்பட காலதாமதமாகும்.

3 மூன்றாம் தர உண்ணோக்கம் - முதல், இரண்டு உண்ணோக்கங்களும் ஒன்று சேர்ந்தவையாகும்.

முதலாம் தர உண்ணோக்கம் தொற்றற்றகாயத்தின் ஓரங்கள் ஒன்று சேர்ந்து குணமாகுதலாகும். உதாரணமாக சத்திர சிகிச்சைக் காயங்கள்.

காயத்தின் ஓரங்கள் கிட்ட அணுகாது அதன் இடைவெளி சிறுமணிக் கலங்களின்வளர்ச்சியால்நிரப்பப்பட்டு குணமடைதலை இரண்டாந்தர உண்ணோக்கம் அல்லது தாமதமாக ஒன்று சேரல் எனலாம். தொற்றுகள் ஏற்பட்ட காயங்கள் இம்முறையினால் குணமடையும்.

காயத்தின் ஓரங்கள் ஆரம்பத்தில் ஒன்று சேராதிருத்தல் அல்லது போடப்பட்ட தையல் பிரிந்து காணப்படும் இடைவெளிகள், சிறுமணிக்கல வளர்ச்சியினால் காயம் குணமடையும் போது இம்முறையை மூன்றாம் முறை உண்ணோக்கமெனலாம்.

காயங்களில் தொற்றைக் கட்டுப்படுத்தினால் 4,5 நாட்களில் காயம் குணமடைய ஆரம்பிக்கும். காயத்தின் மேற்பரப்பில் அயறு உண்டாகி காயத்தில் தொற்று ஏற்படுவதை தடை செய்யும். இறுதியில் காயம் ஏற்பட்ட இடத்தில் தழும்பு காணப்படும்.

காயம் குணமடைவது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.

செல்வி. க. இராஜபதமநாயகி
பொது சுகாதார போதனாசிரியை,
பிராந்திய பயிற்சி நிலையம்,
யாழ்ப்பாணம்.

1. சாதகமான காரணிகள்

இளம் வயது, நல்ல ஆரோக்கிய நிலையும் தாங்கும் சக்தியும், போதியளவு போஷாக்கான உணவு மிச்சமாக புரதமும், உயிர்சத்து 'சி' அடங்கிய உணவுகள். இழையத்தில் குறைவான சேதம் அப்பாகத்திற்கு போதியளவு குருதி வழங்கல், தொற்றற்ற தன்மை, புதுப்பிப்பதற்கு தேவையான இழையங்களின் இருப்பு, காயப்பட்ட பகுதியின் அசைவைக் கட்டுப்படுத்தி அப்பாகத்திற்கு ஓய்வு அளித்தல்.

2. பாதகமான காரணிகள்

வயோதிபம், பொது ஆரோக்கிய நிலைக்குறைவு குறைவான குருதிச் சுற்றோட்டம், சலரோகம், கோற்றிகோஸ்ரிரோயிட் மருந்து அதிகளவு பாவித்திருப்பின் சிதைந்த இழைய வளர முடியாமை, தொற்றுகள், சிதைந்த இறந்த கலங்களும் பிற பொருட்களும் காயத்திலகாணப்படல், அதிக மதுபானம் பாவித்தல், பாதிக்கப்பட்ட உறுப்பை அளவுக்கு அதிகமாக அசைத்தல.

தையல் நீக்கலுக்கும் கட்டலுக்கும் போது மருத்துவமாதரின் பொறுப்புகள்

தையல் அகற்றலுக்கு வைத்தியரின் உத்தரவை பெறுதல் அவசியம். காயத்தின் கட்டுத்துணிகளை மாற்றும் சந்தர்ப்பத்துடன் தையல் அகற்றலுக்கான ஆயத்தங்களை செய்தல் வேண்டும். கூரிய கத்தரிக்கோல், இறுக்கி, பற்கள் அடக்கிய சாவணம், பஞ்சு, கோஸ் என்பனவும் நன்றாக கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

(9ம் பக்கம் பார்க்க)

## மகளிர் தின போட்டி முடிவுகள்

சர்வதேச மகளிர் தினத்தைஒட்டி யாழ் மாவட்ட கூட்டுறவுசபையின் மாவட்ட மகளிர்குழுவினரால் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவிகளுக்கிடையேயும் மகளிர் அங்கத்தவர்களுக்கிடையேயும்நடாத்தப்பட்டபேச்சுப்போட்டி, கோலம்போடுதல் குழுப்பாடல் போட்டிகளினதும் முடிவுகள்வருமாறு.

ஆண்டு 10,11க்கான பாடசாலை மாணவிகளுக்கிடையிலான பேச்சுப் போட்டியில் செல்வி ஜீவரட்ணம் டிலானிபவித்திரா - யாழ் வண்ணை நாவலர்மகாவித்தியாலயம் - முதலாமிடத்தையும்செல்விகள், மலைகமகள் யாழ்/யூனியன்கல்லூரி தெல்லிப்பழைசி - சிவறூபா யாழ் / விடத்தற்பளை கமலாசினிவித்தியாலயம், மிருசுவில்- இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்டு 12,13 மாணவருக்கிடையிலான பேச்சுப் பேட்டியில் யாழ் - கொக்குவில் இந்துக் கல்லூரிமாணவி செல்வி நா. சுகந்தி முதலாமிடத்தையும், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவி செல்வி ஜீ ஜரின் இரண்டாமிடத்தையும், யாழ் / வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிமாணவி செல்வி ச. சிவகாமி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

மகளிர் அங்கத்தவர்களுக்கிடையேநடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில்செல்வி வி.வினோதினிபன்னாலை மகளிர் சி க வ கூ சங்கம் முதலாமிடத்தையும், செல்வி ஆர் தனுஷா அச்சுவேலி ப நோ கூ சங்கம் இரண்டாம்இடத்தையும்,செல்வி ரி தர்பரா அச்சுவேலி ப நோ கூ சங்கம் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

கோலம் போடுதல் போட்டியில் செல்வி நடராசா மாலினி (யாழ் மா மாவட்ட சி க வ கூ சங்க சமாசம்) முதலாமிடத்தையும், சுபாஜினி இரத்தினராசா(சங்கானை ப நோ கூ சங்கம்) இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

குழுப்பாடல் போட்டியில் யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரி முதலாமிடத்தையும், யாழ் யூனியன் கல்லூரி இரண்டாமிடத்தையும், யாழ் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் மூன்றாமிடத்தையும், யாழ் இராமநாதன் கல்லூரி சுன்னாகம் நான்காம் இடத்தையும் யாழ் வட்டு இந்துக் கல்லூரி ஐந்தாமிடத்தையும் பெற்றன.

## இருபதாம் நூற்றாண்டில் இலங்கை கூட்டுறவு..

(6ம் பக்கத்தொடர்ச்சி)

கடந்த நூற்றாண்டில் இலங்கைக் கூட்டுறவு அமைப்புக்களின் தொழிற்பாடுகள் தொடர்பாகவும் பல விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பரிசீலனை செய்து தகுந்தவிளக்கம் கொடுக்கவேண்டியதும் கூட்டுறவு அமைப்புக்களின் தலையாய கடப்பாடாகும்.

மனிதத்துவத்தையும் ஜனநாயக மரபுகளையும் அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகள் கடந்த நூற்றாண்டில் இலங்கை போன்றகுறை விருத்தி நாடுகளின் கூட்டுறவு அமைப்புகளில் அமுல் நடத்தப்படவில்லையென்றும் வியாபார போட்டி சமூகநோக்கின்மை, தலைமைத்துவப் போட்டி நேர்மையீனம் போன்ற சமூகவிரோதப் பண்புகள் கூட்டுறவு அமைப்புக்களில் மேலோங்கி மக்களின் மேம்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கப்பட்டதாக பலராலும் விமர்சிக்கப்பட்டுள்ளது

இவ் விமர்சனங்கள் அனைத்தையும் கூட்டுறவு அமைப்புக்கள் ஆழ்ந்த கவலையுடன் உள்வாங்கிக் கொண்டியக்கின்றன கூட்டுறவு அமைப்புக்கள் கூட்டுறவுக் கொள்கைகளை முழுமையாகச்செயற்படுத்தும்வகையில்செயற்பட்டபோதிலும்சிலதவிர்க்கமுடியாத இடர்கள் அவற்றின் முழுமையான வெற்றிக்குத் தடையாக இருந்தன உயர்ந்த மனித இலட்சியங்களையும் கூட்டுறவுத் தத்துவங்களையும் முழுமையாகச் செயற்படுத்துவதில் பல இடர்களுண்டு; இது மனிதன் நடைமுறையில் கண்ட அனுபவமாகும் பாரிய பிரச்சனைகளை அணுகித் தீர்வுகாணும்பொழுதும் சமூகத்திலுள்ள பல்வேறுவகைப்பட்ட கொள்கைகளையுடைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் பொழுதும் தவிர்க்க முடியாத சில சந்தர்பங்களில் கூட்டுறவு அமைப்புக்களும் தவறுவிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகின்றது சில சந்தர்பங்களில் திட்டமிட்ட தவறுகளும் இடம் பெறுகின்றன வென்பதை கூட்டுறவு அமைப்புக்கள் என்றும் மறுத்ததில்லை இத்தகைய தவறுகள் கூட்டுறவு அமைப்புக்களில் மட்டும் நடைபெறவில்லை சமூதாயத்திலுள்ள எல்லா அமைப்புக்களிலும் பாரியதவறுகள் இடம் பெறுகின்றன இவற்றுக்காக கூட்டுறவு அமைப்புக்கள் மட்டும் விமர்சிக்கப்பட வேண்டியதன் அவசியம்யாதோ என்பது தெரியவில்லை.

கூட்டுறவு அமைப்புக்கள் தமது நடைமுறைத் தவறுகளை நியாயப்படுத்த முயல்வதாக தயவு செய்து எவரும் கருதவேண்டாம், இதுவரை கூட்டுறவு அமைப்புக்கள் மீது தெரிவிக்கப்பட்ட விமர்சனங்கள் இருபத்தியோராம் நூற்றாண்டில் அவற்றை நெறிப்படுத்துபவையாகவும் புனிதப்படுத்துபவையாகவும் அமையட்டும்: கூட்டுறவு அமைப்புக்கள் தம்மைப்பற்றிய விமர்சனங்களை மிகமகிழ்வுடனும் மிக்க நன்றியுடனும் ஏற்றுக் கொள்ள என்றும் தயாராக இருக்கின்றன.

கூட்டுறவு அமைப்புடன் தொடர்புடைய அனைவரும் அனைத்து நிறுவனங்களும் கூட்டுறவுக் கோட்பாடுகளின் மகத்துவத்தை நன்குணர்ந்து அவற்றைப் பூரணமாக ஏற்று அவற்றைப் பூரணமாக நிறைவு செய்ய கூட்டுறவு அமைப்புக்களுக்கு உதவிபுரிவார்களேயாயின் இருபத்தியோராம் நூற்றாண்டில் கூட்டுறவு அமைப்புதம்மைப்புனிதப்படுத்திக்கொள்ளவும். நெறிப்படுத்திக் கொள்ளவும் வாய்ப்புக்கள் இந்நூற்றாண்டில் எதிர்நோக்கியுள்ள முக்கிய கடப்பாடாகும்.

ஆழுமையும் திறமையும் நேர்மையுமுள்ள கூட்டுறவுத் தலைமைத்துவமின்மையும் கடந்த நூற்றாண்டில் கூட்டுறவு அமைப்புக்களின் நல்லியக்கத்திற்கு பெருமளவில் ஊறு விளைவிப்பதாக இருந்தது. சில கூட்டுறவு அமைப்புக்கள்சிறந்தகூட்டுறவுத்தலைமைத்துவத்தைக் கொண்டிருந்த போதிலும் அனேகமான கூட்டுறவு அமைப்புக்களில் தலைமைத்துவக் குறைபாடுகள் பல முகாமைச் சீர்கேடுகளை ஏற்படுத்துபவையாகவே அமைந்திருந்தன. இக்குறைபாட்டை இந்நூற்றாண்டில் நிவர்த்தி செய்ய வேண்டியது கூட்டுறவு அமைப்புக்களை நெறிப்படுத்தி வழிப்படுத்தித் தலைமைதாங்கும் அமைப்புக்களினதும் உத்தியோகத்தர்களினதும் தலையாய கடப்பாடாகும் வளர்ச்சியடைந்த நாடுகளில் இடம்பெறுவது போன்று நவினமுறையிலான விஞ்ஞானரீதியான முகாமைத்துவப் பயிற்சி நெறிகளை நடாத்துவதன் மூலம் ஆழுமையும் நேர்மையும் மிக்க கூட்டுறவுத் தலைமைத்துவத்தை தோற்றுவிக்கவேண்டியது மிக அவசியமாகும். இப்பயிற்சிவகுப்புக்களில் விரிவுரைகள் கலந்துரையாடல்கள சம்பவ ஆய்வுகள் பதவிவகிப்புக்கள் நிரைப்படுத்தப் பயிற்சிகள் அப்பியாசப் பயிற்சிகள் செயல் முறைப்பயிற்சிகள் போன்ற நவீன பயிற்சிமுறைகள் மூலம் கூட்டுறவு த்தலைமைத்துவத்தை ஆழுமைமிக்கதாக உருவாக்க வேண்டியது முக்கிய பொறுப்பாகும். இதனை நிறைவேற்றக்கூடிய வகையில் நவீன விஞ்ஞான வசதிகளைச் கொண்ட பயிற்சிக் கூடங்களும் அதற்கேற்ற தகுதியான ஆளணிவசதிகளும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்

(வளரும்)

## காயத்தின் பராமரிப்பு

(7ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளரின் சுற்றாடலை ஆயத்தம் செய்தல்

1. தனித்துவத்தை பேணவும்.
2. சாப்பாடு உண்ணும் நேரத்தை தவிர்க்கவும்.
3. குழந்தைகளாயின் - அசைவுகளை கட்டுப்படுத்த உபாயங்களை கையாளவும்.
4. நோ - நீக்கி மருந்துகள் தேவைப் படின் கொடுத்தல். உ+ம் எரி காயத்திற்கு மருந்து கட்ட முன்னர்.
5. காயப்பட்ட பாகத்தை உயர்த்தி வைக்கவும்.
6. நோயாளிக்கு செய்யப்போவதை விளங்கப்படுத்தி ஒத்துழைப்பை பெறவும்

செய்முறை

1. காயத்திற்கு பராமரிப்பு கொடுப்பவரது கைகள் இரண்டும் நன்றாக சவர்க்காரமும் நீரும் கொண்டு கழுவுதல் வேண்டும்.
2. காயக்காரரின் உடை படுக்கை விரிப்பு நனையாதுபாதுகாக்கவும்
3. முன்பு கட்டப்பட்டிருக்கும்காயத்தின் கட்டை அல்லது ஒட்டியுள்ள பிளாஸ்ரரை மெதுவாக அகற்றவும்.
4. காயத்தை அவதானித்தல் -
   காயத்தின் ஓரங்கள் ஒன்று சேர்ந்துள்ளதா !
   - காயத்தில் வீக்கம் அல்லது நிற மாற்றம் உண்டா ?
   - சீழ் தென்படுகின்றதா ?
   - துர்நாற்றமுண்டா ?

சுத்தமான காயத்தின் பாரமரிப்பு

தொற்று நீக்கம் செய்யப்பட்ட சாவணத்தால் தொற்று நீக்கிய பஞ்சுத்துண்டில் மதுசாரத்தை தோய்க்கவும். காயத்தின் மேற்பரப்பில் மெதுவாக ஒற்றவும். காயத்தின் இரு பக்கங்களையும் மதுசாரம் தோய்த்த வெவ்வேறு பஞ்சுத்துண்டால் காயத்திலிருந்து வெளிப்புறமாக துடைக்கவும். தையல் அகற்ற கூடியதாக இருப்பின் அகற்றவும். நைலோன் முடிச்சுள்ள பாகத்தை சாவணத்தால் பிடித்துக் கொண்டு மறு புறத்திலுள்ள நைலோனுக்குள் கத்தரிக்கோலின் கூரைவிட்டு மெதுவாக வெட்டவும். முடிச்சுப்பக் கத்தால் சாவணத்தின் உதவியுடன் இழுத்து எடுக்கவும். சருமத்தினுள் நைலோன் துண்டுகள் தங்கிநிற்கலாகாது. ஒன்றைவிட்ட ஒரு தையல் அல்லது முழு தையல்களையும் நீக்கிய பின்னர் மதுசாரம் கொண்ட பஞ்சுத் துணியால் காயத்தின் மேற்பாகத்தை ஒற்றி சுத்தப்படுத்துவதுடன் சருமத்தின்விளிம்புகள்ஒன்றுசேர்ந்திருப்பதை கவனிக்கவும் காயத்தின் மேல் தொற்றுகள் ஏற்படுவதை தவிர்க்க தொற்று நீக்கம் செய்யப்பட்ட சல்லடை (கோஸ்) துணியைவைத்து கட்டுப் போடவும் அல்லது ஒட்டுப் பிளாஸ்டரால் ஒட்டிவிடவும்சுத்தமான காயத்திற்கு பராமரிப்பளித்த பின்னர் தொற்றுள்ள காயத்திற்கு பராமரிப்பு அளிக்கவும்.

தொற்றேற்பட்ட காயத்தின் பராமரிப்பு

உபகரணங்கள் கிருமி நீக்கம் செய்யப்பட்டதாகவும் பராமரிப்பாளரின் கைகள் நன்றாக சவற்காரமும் நீரும் கொண்டு சுத்தம் செய்யப்பட்டும் இருத்தல் முக்கியம் காயத்தில் தொற்றின் அறிகுறிகள் தென்பட்டால் தையல்களை கழற்றிவிட வேண்டும். இது உள் தேங்கி நிற்கும் சீழ் தொற்றுள்ள உடல் பாயங்கள் வெளியேற வசதியாகும்.

காயத்தின் வெளிப்புறத்தை சவ்லோன் 1:200 கரைசல் திரவம் தோய்ந்த பஞ்சுத் துண்டுகளால் சாவணம் கொண்டு சுத்தப்படுத்தவும். வெளிப்புறத்தில் மெதுவாக அழுத்தும் போது உள்ளிருக்கும் சீழ் வெளியேறும்.

நன்றாகக் காயத்தை சுத்தம்செய்வதனால் புது இழையங்கள் உண்டாக வாய்ப்பு ஏற்படும். இறந்த இழையங்களை அகற்றவும். காயத்தில் காணப்படும் கிருமிகளின் பெருக்கத்தை குறைப்பதற்காகவும், பிராண வாயு அற்ற சூழ்நிலையில் வளரக் கூடிய கிருமிகளின் வளர்ச்சியை தடுப்பதற்காகவும் (ஹைட்றஜன்பெரொக்ஸைட்)2 ஐதரசன் திரவத்தை காயத்தின் மேலிடவும். பின்னர் உலர்ந்த தொற்று நீக்கிய பஞ்சினால் ஒற்றி துடைக்கவும். திரும்பவும் சவ்லோன் பஞ்சினால் காயத்தின் மேற்புறத்தை துடைக்கவும் காயத்தின் வீக்கத்தை குறைப்பதற்காகவும் உள்ளிருக்கும் குழிவானசீழ் பழைய குருதியென்பனவற்றை வெளியேற்றவும் உதவியாக அடர்த்தி கூடிய (ஹைபர் ரொனிக்) அசலைன் அல்லது மக்னீசியம் சல்பேற் கரைசலை சல்லடை துணியில் நனைத்து காயத்தின் மேல்வைத்துக் கட்டவும்.

தொற்றுள்ளகாயத்திற்குநாளாந்தம் பராமரிப்பு தேவையாகும். காயம் நனையாது பாதுகாத்தல் அவசியம். காயம் நனைந்து விட்டால் ஈரத்தை ஒற்றி எடுத்து விட்டு மருந்துவிடவும்.

பாவித்த பந்தனங்கள், பஞ்சு போன்றவற்றை புதைக்கவும். பாவித்த கத்தரிக்கோல், சாவணப் பெட்டி அனைத்தையும் நன்றாக சவர்காரமும் நீரும் கொண்டு கழுவிகொதிநீரில் 5நிமி. அவித்து எடுத்து உலர்த்தி வைக்கவும்.

## வயிற்றோட்டமும் தயிரும்

தயிர் "புளிக்க" வைக்கப் பட்ட பால். இந்தப் "புளிப்பேற்றல்" நடைபெறும் வேளையில் பாலில் இருக்கும் புரதம் இலகுவாகச் சமிபாடடையக் கூடிய விதமாக மாற்றமடைகின்றது. முக்கியமாகத் தயிரில் பெருக்கமடைந்திருக்கும் நன்மை பயக்கும் லெக்டோ பெசிலஸ் (Lacto bacillus) பற்றீரியாக்கள் எமது குடலிலும் "குடியமர்ந்து" பல்கிப் பெருகும்பொழுது. தீங்கு விளைவிக்கும் வயிற்றோட்ட பற்றீரியாக்களை, வைரசுக்களைப் பெருக்கமடையவிடாது பெருமளவுக்குத் தடுக்கிறது. அகவே அடிக்கடி வயிற்றோட்டம் ஏற்படுபவர்கள் தயிரை ஒவ்வொரு நாளும் உணவில் சேர்த்துக் கொள்ளுவது நல்லது.

அது மட்டுமல்லாமல் வயிற்றோட்டம் இருக்கும் பொழுது, தயிரை, நீருடன் கலந்து மோராக்கி உண்பது நீர் வரட்சி உண்டாகுவதையும் தடுக்கும். இதனால் ஏற்படும் தேவையற்ற குழந்தை மரணத்தைத் தடுக்கும்.

# பெண்கள் தம் தியாகத்தினால் ஆண்களை,..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்குச் சுய உரிமையை தா என்று நாங்கள் கேட்கக்கூடாது. நாம் செய்யும் தியாகத்தினால், எமது தியாகத்தின் முன்னே அவர்கள் பூரண சரணாகதி அடைய வேண்டும். ஆண்களுடைய எங்களுடைய தியாகஅன்பும் தயை, பொறுமை.

எங்களுடைய இந்து அறங்களெல்லாம் இந்த அன்பைத்தான் அடிப்படையாக கொண்டது. உண்மையான வாழ்வு அன்பிலேதான் இருக்கிறது. வெறும் பட்டத்தையும் பதவியையும் பொருளையும் கொண்டு வாழவே வாழ்வுக்கு உயிர், சக்தி, இன்பம் அழிப்பது ஆனந்தமாக்குவது அன்பு.

இந்த அன்பை உணவுடனும் உள்ள நெகிழ்ச்சியுடனும் உடையவள் அன்னை. எனவே உலகத்திலே படைப்புக்களில் எல்லாம் தலை சிறந்ததான தாய்மையை நாங்கள்போற்ற வேண்டும் பாராட்ட வேண்டும். வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சிலர் சமைக்கும்போது அது அமிர்தமாகவும் இருக்கும். நஞ்சாகவும் இருக்கும். நல்ல எண்ணத்துடன் சமைக்கப்பட்ட உணவு அமிர்தமாக இருக்கும் தீய எண்ணத்துடன் சமைக்கப்பட்ட உணவு நஞ்சாகிறது.

அம்மா அன்புடன் குழையல் செய்து தான் சமைக்கிறாள். கையினால் சமைக்கவில்லை இதயத்தினால் சமைக்கிறாள் இது மகிழ்ச்சி ஆனந்தம் கொடுக்கிறது.

நாங்கள் சமூகத்திலேயோ? சமூகத்தின் சிற்பிகளை உருவாக்கும் ஆணிவேர். எங்களுடைய பண்பு சிறந்தால்தான் இந்த குடும்பமே சிறக்கும் சமூகம், நாடு சிறக்கும்.

தாய் - தியாகக் கனலிலே வேள்வியிலே ஆகுதியாக்கி அன்பைப் பேணும்பொழுதுதான் உண்மையான குழந்தை உருவாகும்.

வாழ்வில் மனிதன் நிம்மதியாக இருக்க வேண்டுமானால் எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்று அலையத் தேவையில்லை. நிம்மதி வீட்டிலே இருக்கு. இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை இல்லாள் என்பவள் யார்? காசு, பட்டம், வீட்டோடு ஏனையபொருட்களுடன் வந்தவளா? இல்லை பண்பாட்டுடன் வந்தவள். அன்பு என்ற பண்பாட்டுடன் வந்தாள் அப்போது தான் நிம்மதியைத் தர முடியும்.

அன்புடன் உரையாடும் போது வாழ்வு சிறக்கிறது, இதயத்தினால் கொள்ளும் உறவு உண்மையானது சிறந்தது. உயிரும் உயிரும் பேசுகின்ற உறவுகள் உண்மையான உறவு அந்த உறவினை வளம்படுத்த மகளிர் விளிப்புணர்ச்சி கொள்ள வேண்டும். அப்படியான பொறுப்புணர்ச்சி கொண்டால் சீதனப்பிரச்சினை வராது ஏனைய கொடுமைகள் இராது ஏன் உண்மையான அன்பிலே வாழும்போது எல்லாமே இன்பமாக இருக்கும்.

நாங்கள் எங்கே நிம்மதி என்று ஓடத் தேவையில்லை. எங்களுக்குள்ளே நிம்மதி இருக்கும் நன்று தீதும் பிறர் தருவாரா, நாமே நமக்குப் பகைவரும் நட்புமாம். நமக்குள்ளே சித்தத்தினுள்ளே சிவமணம் பூத்ததென்று ஞானிகள் சொல்வர் எங்களுக்குள்ளே எங்களுடைய ஒவ்வொரு அசைவும் இதயபூர்வமாக இருக்கும் போதுதான் வாழ்வு சிறக்கிறது. சக்தி, இன்பம், அன்பு ஆனந்தம் பிறக்கிறது.

எனவே வாழ்க்கை மறுதலிப்பது தான் அன்பை நிராகரிப்பது அன்போடு இணையும் போது தான் உண்மையான வாழ்க்கை கிடைக்கிறது. இந்த அன்போடு இயைந்த வாழ்வுக்கு பொருளும் பட்டமும் பதவியும் உதவியாக இருக்கும் ஆனால், அன்பில்லாவிட்டால் இவையெல்லாம் உபத்திரவங்களேயன்றி இவை ஒருபோதும் உதவமுடியாது.

வெறும் பொருளைக் குவித்து வைத்து இன்பத்தை அனுபவிக்க முடியாது. சீதை இராமருக்கு சொன்னது போல், பிரிவினும் சுடுமோ பெருங்காடு.

வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகள் அன்புக்காக ஏங்குகிறார்கள் பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடந்து வந்தோம் என்று வீட்டிலே குழந்தை அன்புக்காக ஏங்குகிறது, அம்மா எப்போ வருவா? என்று ஏங்குகிறது. வாழ்வு என்பது, குழந்தைகளைத் தொட்டு அவர்களுடைய உள்ளத்தைத் தொடும்போது தான் உண்மையான வாழ்வு கிடைக்கிறது;

அதை மறுக்கமுடியாது. வேலைக்குச் செல்லும் ஒரு நேரமாவது குழந்தைகளுடன் அன்பாக அளவளாவி வருடும் பொழுது ஆனந்தமடைவர்.

எந்த திறமான உணவுப்பொருள் இருந்தாலும், தாயின் கைபட்ட சிறிய பொருள் அமிர்தமாகும்.

அங்கே தான் அன்பின் அதிர்வு சக்தி தொழிற்படுகிறது. எனவே மகளிர், எங்கள் குழந்தைகளை மாத்திரமன்றி, சமூகத்தை அயலவரை, குடும்பத்தை அன்பாலே கட்டிக்காக்கும் பண்பாடுடையவர்களாக எங்களை நாங்கள் வாழப்பழகிக்கொள்ள வேண்டும். அதற்குப் பயிற்சி தேவை.

அப்படியான சமுதாயம் எந்த போர், துன்பம், கஷ்ரத்தை எதிர் நோக்கி முகம் கொடுத்து நின்று களைக்காது நிற்கக்கூடிய ஒரு சமூகம் எனவே, மகளிர் தினமான இன்று விழிப்புணர்ச்சி கொள்வதாக இருந்தால் எங்களை நாங்கள் சுய விமர்சனம் செய்ய வேண்டும்.

குடும்பத்தைக் கவனிக்காதவர் நாட்டைப் பார்க்க முடியாது தர்மம் குடும்பத்தில் ஆரம்பிக்கிறது. அம்மாவை மதிக்காதவன் ஏனையோரை மதிக்க முடியாது ஏனெனில் தாய்தான் அவனுக்கு அனைத்தையும் போதிப்பவள். இந்த உடலை உளத்தை, அனைத்தையும் கொடுத்த அன்னையை மதிக்காதவன் மற்றவரை மதிக்க முடியுமா? அப்படி மதிக்கின்றான் என்றால் அது போலி.

போலி நிலைக்காது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு. தாயை மதிக்க சிறுவயதிலேயே கற்றுக்கொள்ள வேண்டும்.

இயற்கையை நாம் போற்றக் கற்றுக்கொள்ள வேண்டும். அன்னை சிறுவயதில் இருந்து இயற்கை அனைத்தையும் போற்றுகின்ற மதிக்கின்ற அவற்றை எல்லாம் தன்னுடைய வாழ்வுக்கு வளம்சேர்க்கின்றபொருள்களாக எண்ணுகின்ற நினைப்பை நாம் ஊட்ட வேண்டும். யாதும் ஊரே யாவரும் கேளீர் தாய் அன்புள்ளத்தை பிள்ளைக்கு ஊட்டினாலன்றி பிள்ளை ஒருபோதுமே நல்ல பிள்ளையாகமாட்டாது.

(11பக்கம் பார்க்க)

## நிந்தித்தவனையும் நியாயமாக நடத்து

புத்த பகவான் நிர்வாணநிலை எய்திய காரணத்தால், நல்லவன், பொல்லாதவன் என்றபேதமில்லாது யாவரையும் ஒரே தன்மையாய் அன்பும், கருணையும் கொண்டு நடாத்தும் முறையினால் உலகத்துக்கு அவர் ஒரு உயர்ந்த உதாரணபுருஷனாகத் திகழ்கின்றார்.

தர்மத்தைப் போதனை செய்வதற்காக ஒரு கிராமத்துக்குச் சென்றார். அக்கிராமவாசிகளுள் ஒருவனுக்கு இவருடைய போதனையில் நாட்டம் இல்லாமல் இருந்தது. புத்தபகவானை அண்டி கேலி செய்து தூஷித்துவிட்டான். புத்தபகவான் புன்சிரிப்பு செய்து அவன்மீது இரக்கம்காட்டினார். புத்தபகவான் தனக்கே உரித்தான சாந்தநிலையில் அவனைப்பார்த்து; சினேகிதா, உனது தூஷணையும், ஏச்சும், கேலியும், என்னை

## மணி மொழிக் கதைகள்

ஒருவிதத்திலும் பாதிக்காது. உதாரணத்துக்கு, நீர் ஒரு பழுத்தகனியை ஒருவருக்குக் கொடுக்கின்றீர். அதனை உம்மிடம் இருந்துபெறுவதற்கு மறுப்புதெரிவிக்கின்றார். அப்போது அப்பழம் எவரிடம் போகும் என்று கேட்டார். ஓ, இலேசானகேள்வி. அப்பழம் என்னிடமே இருக்கும் என்றான்கிராமவாசி. புத்தபகவான், சினேகிதரே என்னைவாயாரத்திட்டினீரே, வைதீரே, அவைகளை நான்ஏற்கவில்லை; என்றார்.

கிராமவாசி உண்மை தெளிந்தான். புத்தபகவானின் புனிதபாதமலரில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டான். ஒருவரின் இதயத்தில் இரக்கம், பிழை பொறுத்தல், சகிப்பு போன்றன இருக்கின்றனவோ அவரிடம் இறைவன் உறைகின்றான்.

### பெண்கள் தம் தியாகத்தினால் ஆண்களை

10ம் பக்க தொடர்ச்சி

விஞ்ஞான ஆய்வில் அன்பு கிடைக்காத பிள்ளைகள் குழப்படியாகவும், சமுதாயத்துக்கு விரோதிகளாகவும் மாறுவதாககூறப்பட்டுள்ளது,

நல்ல அன்பு கிடைக்கின்ற இடத்தில் சமுகத்தின் தலைவர்களாகவும்வழி காட்டிகளாகவும், பெரியோர்களாகவும் பிள்ளைகள் வர முடியும்;

இந்த நாளிலே எமக்குள்ளகடமை என்னவென்று சிந்திக்கவேண்டும வெறும் உண்மைக்கு குரல்கொடுக்க கூடாது. கடமையைச் செய் உரிமைகிடைக்கும். இது தான் ஆந்மீகம் இந்த அறம்

அன்புக்கு ஆண்டவன் கூடஅடிமை. அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார் அன்பே சிவமாவதாகும அறிகிலார்.

அன்பாலே யாவையும் அடக்கலாம். அந்த ஆற்றலைப் பெண்கள் வளர்த்துக்கொள்ளவேண்டும். குறிப்பிட்ட, யாவிடர் அனைவரும் அன்பைப்பார்க்க வேண்டும். தாய் இந்த அன்பை வளர்க்காவிட்டால், அவள்பெறும குழந்தைகள் சமூகத்தைக் கெடுக்கின்ற குலத்தைக கெடுக்க வந்தநாசகர்களாக முடியும்,

பிரபஞ்சம், இந்த உலகம்அனைத் திற்கும் தாய்மை. தாய்மை தான் அது எந்த உயிரினத்திற்கும் பொருந்தும் பெண் தாய்மையிலே புனிதமடைகிறாள். வழிபாட்டுப் பொருளாகின்றாள்.

பெண்ணுக்குத்தான் வழிபாடுதாயிற் சிறந்ததோர் கோயிலும இல்லை. இந்த மகளிர் தினத்திலே நான் கேட்கிறேன் பெண்கள் எல்லாம் வழிபாட்டிற்குரிய பொருளாகவேண்டும்.

தங்களுடைய கடமை, பண்பாட்டினால் தம்மைக் கோயிலாக்க வேண்டும். அவ்வாறானவள் பெற்றபிள்ளைதான் அவள் நல்ல பண்புள்ளவனாகவருவான். சீதனம் கேட்க மாட்டான் பண்பாடுள்ள தாய் பெற்ற பிள்ளை சீதனக் கொடுமையைச் செய்ய மாட்டான். இந்த தாயினுடைய வளர்ப்பிலேதான் சீதனக்கொடுமையை ஒழிக்க முடியும்,

இந்தப்பண்பாடு நிலைத்தால் மானுடத்தை பேணினால் பெண் தாழ்த்தப் படுவதற்குரியவளல்ல போகத்துக்குரியவளல்ல. சமயலறைக்குரியவளல்ல அவள் அடிமையல்ல அவள் புனிதமான கோயில் வழிபாட்டிற்குரிய தெய்வம்;

இறைவனுக்கும் நிவேதனம் கணவன் பிள்ளைகளுக்கும் நிவேதனம் அன்பு படையல். இதை மறந்துசமைப்பதற்கு பெண்களா உரியவர் என்ற கேள்வி கேடகலாகாது.

உளத்தாலே ஒருவரை ஒருவர் தழுவி அந்த அன்புநிலையிலே அமுதப் படையல் இடும்போது மனிதன் புனிதனாகிறான்.

### இலங்கையில் கூட்டுறவின் ..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

றத்தை மேலெழுந்தவாரியாக அன்றி அடிப்படை மாற்றங்களிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். என்று ஒரு முறைக்குப் பலமுறை விதந்துரைக்கின்றோம்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

1968ஆம் ஆண்டு அரச ஆணைக் குழுவின் பிரதான விதந்துரைகளின் நடைமுறைகளின் மூலம் பொருளாதார செயற்பாட்டு சாத்தியமுடைய கூட்டுறவு ஸ்தாபனங்களை உருவாக்குவதே. இவ் ஸ்தாபனங்களை உருவாக்குவதற்கான விசேட சட்டம் 1970இல்நிறைவேற்றப்பட்டது இதன் பின்னர் செயலிழந்தநட்டத்தில்இயங்கும் மற்றும் அவசியமற்றவை எனக் கருதப்படும் சங்கங்களின் பதிவுகளை ஆணையாளர் இரத்துச் செய்து எஞ்சிய சங்கங்களை ஒன்றிணைத்துப் பெரிய ஆரம்ப பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கினார்; இம்மாற்றம் ஏற்பட்டிருந்தும் கூட்டுறவுக் கொள்கைகளில் ஒன்றான ஜனநாயக செயற்பாடு குறைவாகக் காணப்பட்டது. இக் குறைபாட்டை நிவிர்த்தி செய்யும் முகமாக 1977இல் பதவி ஏற்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட்டுறவு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற கூட்டுறவு இயக்கத்தை நெறியாளர்களும் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படல் வேண்டும். என்னும் நோக்கோடு கே டபிள்யூ. தேவநாயகம் அவர்கள் தலைமையில் ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(12ம் பக்கம் பார்க்க)

Registered as a News paper at the G. PO
SriLanka Under No K. V. J. 59 / 87



# உயர் பிரிவு பரீட்சை முடிவுகள்

கூட்டுறவுக் கல்லூரி, வடக்கு, கிழக்கு மாகாணம் திருகோணமலையினால் 1999ம் ஆண்டு ஐப்பசி மாதம் நடாத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (உயர்தர) பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சையில் 16 பேர் 3ம் பிரிவில் சித்தியடைந்துள்ளனர். மூவர் தூன சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தோர் பெயர்விபரம் வருமாறு:

கி. அபிதகுசாம்பிகை, ந. இராசமலர், ந. கவிதா, கி. கௌரிதேவி, சி. சிவரூபி, த. சுமதி, சே. பானுமதி மு. பிறேமளா, ப. ஜெ. அசம்ரா, க. அருமைநாயகம், க. சத்தியதாசன் க. தர்மலிங்கம், இ. நாகராசா, க. நா. சபாரத்தினம் ப. பிரதீபன், தி. ஜெயகணேசன்.

நானசித்தி அடைந்தோர் பெயர் விபரம் வருமாறு.

சோ. அனுசுயா, தே. மகேந்திரன். கி. மல்லிகாதேவி.

## பெண்களின் ஆற்றல் திறமைகளை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. ஒ. சண்முகநாதன் பேசுகையில் கூறியதாவது.

இன்று எமது சமுதாயத்தைச் சீரழிக்கும் பெரும் சாபக்கேடாக இருப்பது ''சீ''தனம் என்னும் கொடிய அரக்கனாகும் சீதனக்கொடுமையினால் பல இளம் பெண்களின் வாழ்க்கை சீரழிந்து உரிய காலத்தில் திருமணம் நடைபெறாமல் போவதையும், திருமணமான பின் சீதனத் தகராற்றினால பிரிந்துவாழும் இளம் குடும்பங்கள் ஏராளம் எம்மத்தியில் இப்போதும் உண்டு.

சீதனம் வாங்கும் விடயத்தில் ஆண்மகனின் தாயாரே (அவளொரு பெண்ணாக இருந்துகொண்டு) அதிக கடும் போக்குடையவராகக் காணப்படுகிறார் என்பதை எமமால் அவதானிக்க முடிகிறது.

சில இடங்களில் சில பெண்பிள்ளைகளே அக்காவுக்கு பத்துலட்சம் சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைத்தால்என்னஎன்றுதம முடையபெற்றோரை நச்சரித்து துன்பப்படுத்திவருவதையும், அறியக்கூடியதாகவும் உள்ளது. இவ்வாறான கொடுமைகளை நீக்குவதற்கு பெண்கள் சிந்தித்து விழிப்புணர்வு பெறும் ஒரு சந்தர்ப்பத்தை இன்றைய மகளிர் தினத்தில் கொடுத்துள்ளோம் என்றார்.

யாழ் மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி பேசும் போது கூறியதாவது

யாழ் மாவட்ட கூட்டுறவு சபையைப் பொறுத்த வரையில் மகளிர் களுக்கான தேவைகளை இனங்கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதைநோக்கமாகக் கொண்டு பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

மகளிர்களுக்கு நாம் வழங்கி வரும் பயிற்சிகளின் மூலம், அவர்கள் சமூகத்தில் சிறந்த தலைமைத்துவத்தை, கூட்டுறவு அடிப்படையில் எய்துவதற்குரிய வகையில் பயிற்சியின் பாடத்திட்டத்தையும் தயாரித்து பயிற்சி அளித்து வருகிறோம், என்று கூறினார்,

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை முது நிலை விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது.

பெண்கள் தங்கள்ஸ்தானத்தில் இருந்தால் என்ன? மனைவிஸ்தானத்தில் இருந்தால் என்ன அவர்கள் அன்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஒரு பிள்ளைக்கு தாயின் அன்பும் அரவணைப்பும் கட்டாயம் இருக்கவேண்டும். அன்பை ஊட்டி வளர்க்காத பிள்ளைகள் பிற்காலத்தில் கெட்ட எண்ணங்கள் குடி கொண்ட சமூகவிரோதியாக சமூகத்தில் நடமாடுவான்.

அன்பில்லாத இடத்தில்மானுடம் இருக்கமாட்டாது. சமுதாய சிற்பிகளை உருவாக்கும் தாய் என்றபெண் தன்னை வேள்வியில் ஆகுதியாக்கி அர்ப்பணிப்பவளாகவிளங்குகின்றாள்

மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே. செல்வரத்தினம்வரவேற்புரை நிகழ்த்தினார்.

பேச்சுப்போட்டியில் முதாலாவது இடத்தைப்பெற்ற மாணவியரின் பேச்சும் மகளிர்குழு உறுப்பினரின் பேச்சும் இடம்பெற்றது.

பயிற்சிபெற்று முடிந்தவர்களுக்கான சான்றிதழ்களை முதன்மை விருந்தினர்களும், சிறப்பு விருந்தினர்களும் கௌரவ விருந்தினர்களும் வழங்கிக் கௌரவித்தனர்.

மகளிர் குழு அங்கத்தவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மாவட்டச் செயலாளர் திரு சு. சிவசுப்பிரமணியம் நன்றி உரை கூறினார்.

## இலங்கையில் கூட்டுறவின்..

(11ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூட்டுறவுச் சட்டத்தில் கூட்டுறவுத்துறையின் அபிவிருத்தி கருதி 1992ஆம் ஆண்டு திருத்த கொண்டுவரப்பட்டுப் பல மாற்றங்கள் செய்யப்பட்டது.

மக்கள் தமது பொருளாதார கலை, கலாச்சார விருத்தி கருதி தாமாகவே முன்வந்து ஒன்று கூடுகின்றனஅமைப்பாகக் கூட்டுறவு இயக்கம் காணப்படுவதால் சமூகத்தில் உரிமைகள் மறுக்கப்படும் இடங்களிலும் பொருளாதார பலவீனங்கள் நிலவும் சமூகங்களிலும் கூட்டுறவின் தோற்றமும், வளர்ச்சியும் துரிதப்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம்.

யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 1ம் மாடியில் இயங்கும் யாழ், மா, கூ. சபையினரால் 2000ம் ஆண்டு பங்குனிமாதம் வெளியிடப்பட்டது.